செ.வெ.எண்: 15 நாள்: 04.02.2017

**வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும் - விராலிமலை வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிட திறப்பு விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் உறுதி.**

**----**

**மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மருத்துவக்கல்லூரி மற்றும் வேளாண்மைக்கல்லூரி வழங்கி கடைக்கோடி மாணவ, மாணவியர்களின் கல்விக்கண்ணை திறந்து வைத்துள்ளார்கள் - விராலிமலை வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிட திறப்பு விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பெருமிதம்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் ரூ.1.5 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மறைந்த மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் முதன்மை துறையான வேளாண்மை துறைக்கு கடந்த 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி உள்ளார்கள். குறிப்பாக ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம், உயிர் உரங்கள் உற்பத்தி மையம், நுண்ணூட்ட கலவை மையம், மண் பரிசோதனை நிலையம், மத்தியக்கட்டுப்பாட்டு ஆய்வகம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை மையம், மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் உட்பட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பல்வேறு நிலையங்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்துள்ளார்கள். மேலும் விவசாயிகளுக்கென பல்வேறு நலத்திட்டங்கள் குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் விதை பெருக்குத்திட்டத்தின் கீழ் 3377 மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், 17 மெ.டன் சிறுதானிய சான்று விதைகள் உட்பட பல்வேறு விதைகள் விநியோகம் செய்யப்பட்டு உள்ளது. விவசாயிகளின் வாழ்வாதாரம் மேலும் மேம்பட மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் 6 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, விராலிமலை வட்டாரத்தில் இன்று (04.02.2017) புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 மையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், தமிழகம் முழுவதும் பருவமழை பொய்த்து போனதால் விவசாயிகளின் விளைநிலங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரை நெற்பயிரில் 1,51,825 ஏக்கர் பரப்பளவிலும், மக்காச்சோளம் 901.5 ஏக்கர் பரப்பளவிலும், நிலக்கடலை 907 ஏக்கர் பரப்பளவிலும், உளுந்து 1431.6 ஏக்கர் பரப்பளவிலும், கரும்பு 4 ஏக்கர் பரப்பளவிலும் என மொத்தம் 1,55,069 ஏக்கர் நிலங்களில் 50 சதவீதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டு, மத்திய குழுவிடம் அறிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து நிவாரண நிதி வரப்பெற்றவுடன் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரண உதவி வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் பேசினார்.

..2..

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியபோது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 2016 தேர்தல் நேரத்தில் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதியின் படி ஆட்சிப்பொறுப்பேற்ற முதல் 5 கையெழுத்தில் ஒன்று விவசாயக்கடன் பெற்ற விவசாயிகளின் கடன் சுமையை குறைக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க்கடன், நடுத்தர கால வேளாண்மை கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்டக்கால கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டு விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி உள்ளார்.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டு ஆட்சியில் 3 வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் தஞ்சாவூர், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அடுத்து நமது புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த 3 ஆண்டுகளாக இக்கல்லூரி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மருத்துவக்கல்லூரி மற்றும் வேளாண்மைக்கல்லூரி வழங்கி மாவட்டத்தில் மாணவ, மாணவியர்களின் கல்விக்கண்ணை திறந்து வைத்த முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழகஅரசிற்கும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வேளாண்மைத்துறையின் மூலம் பவர்டிரில்லர், ரொட்டவேட்டர், கறவை மாடுகள், இடுப்பொருட்கள், மண்வள அட்டை, சூரிய சக்தி விளக்கு பொறி, பண்ணைப்பள்ளிகிட் என 170 பயனாளிகளுக்கு ரூ.65.85 இலட்சம் மதிப்பிலான நலத்திட்டம், தோட்டக்கலைத்துறை மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் - இயந்திரமயமாக்குதல், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டம், புதிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 115 பயனாளிகளுக்கு ரூ.41.46 இலட்சம் மதிப்பிலான நலத்திட்டங்கள் என மொத்தம் 285 பயனாளிகளுக்கு சுமார் ரூ.1.08 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இரத்தினசபாபதி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (கோயம்புத்தூர்) துணை வேந்தர் முனைவர்.கு.ராமசாமி, வேளாண்மை துணை இயக்குநர் திரு.இரா.அண்ணாமலை, வேளாண்மை பொறியியல் துறை தலைமைப்பொறியாளர் திரு.தெய்வேந்திரன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.அன்பழகன், விராலிமலை முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, ஆத்மா தலைவர் திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**